CNR.No.TNMY03-000140-2023

முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை - திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி - மயிலாடுதுறை
திருவள்ளுராண்டு 2055, குரோதி வருடம், சித்திரை மாதம் 10-ம் நாள்
2024-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் செவ்வாய் கிழமை

**எம்.சி.ஓ.பி நம்பர்.5/2023**

பிரித்திஷா அவரது இயற்கை
காப்பாளரான ராஜாராமன் ....மனுதாரர்

//எதிர்//

1. நிதிஷ்
2. ஹீரோ எர்கோ ஜெனரல்,
இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட். ....எதிர்மனுதாரர்கள்

மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் திரு.எ.ஆர். சிவநேசன் அவர்களும், 2ஆம் எதிர்மனுதாரருக்காக வழக்கிறஞர் திரு.ஆர். சேயோன் அவர்களும் ஆஜராகி, 1ஆம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை இம்மனுவில் மனுதாரர்களாக சேர்க்க மேல் நடவடிக்கை இதுநாள் வரையில் எடுக்காததால் 23.04.2024 அன்று இதுநாள் வரையில் எனது பரிசீலனையில் வைத்து இன்றைய தினம் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

<u>உத்தரவு</u>

இம்மனு மனுதாரரால் மோட்டார் வாகன விபத்தில் காயமுற்றதற்கு நஷ்ட ஈடாக ரூ.10,00,000/- த்தை பின்வட்டியுடன் சேர்த்தும் இந்த தொகையை எதிர்மனுதாரர்கள் கொடுக்க வேண்டுமென்றும், இந்த மனுவிற்காக செலவு தொகையை எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும் தனித்தனியாகவும் கொடுக்க வேண்டுமென்றும் சட்டப்பிரிவு 166-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

போதுமான அவகாசம் வழங்கியும் மனுதாரர் இம்மனுவில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மனுதாரரை அழைத்தும் ஆஜராகவில்லை மேலும், அவர் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகியது.

இந்த உத்தரவு என்னால் இன்று (23.04.2024) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒ/ம். திருமதி பி. கவிதா),
முதன்மை சார்பு நீதிபதி,
(மோட்டார் வாகன கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி),
மயிலாடுதுறை.